**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

**Date : 18.09.2025**

**SC. 13/2021**

**அ.சா 10 – முரளி, காவல் உதவி ஆணையர் , சேலம்**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ம் நாள் **முரளி** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **முரளி** | தந்தை பெயர் | அம்மாபட்டி |
| வயது | 53 | கிராமம் | சேலம் |
| **வட்டம்** | சேலம் | மாவட்டம் | **சேலம்** |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

நான் தற்போது சேலம் மாநகரம் , கொண்டலாம்பட்டி சரக உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.12.2012 அன்று நான் மத்திகிரி வட்ட ஆய்வாளராக பணிபுரிந்த போது சிப்காட் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. விஸ்வாசம் என்பவர் பதிவு செய்து எனது புலன் விசாரணைக்கு வைத்த சிப்காட் காவல் நிலைய குற்ற எண் 485/2012 U/s 294(b), 324, 506 (ii) இதச வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 30.12.2012 ம் ஆண்டு காலை சுமார் 8.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் மரிய லியோ வில் பிரட் மற்றும் ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா 2 மூலம் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ 6** குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினமே காலை 9.30 மணியளவில் சம்பவ

இடத்திற்கு சுமார் 25 அடி கிழக்கே உள்ள காலி இடத்தில் கிடந்த அருவாள் –1 ஐயும், சுமார் 49 செமீ நீளமுள்ள அருவாளின் கைப்பிடி சுமார் 17 செமீ , 37 செமீ கூர்மையான பகுதியும், மரிய லியோ வில் பிரட் மற்றும் ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் முன்பாக கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா 2 மூலம் அ.சாஆ, 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்து பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பங்கள் பெற்றேன். தொடர்ந்து சாட்சிகள் சரவணன், சதிஸ், பூபால். அந்தோனிசாமி, ராமமூர்த்தி ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 31.12.2012 ம் தேதி வழக்கின் சட்ட பிரிவை U/s 294(b), 324, 506 (ii) இதச வின் கீழ் வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலங்களின் படியும் எனது புலன் விசாரணையின் படியும் U/s 294(b), 324, 506 (ii), 307 இதச வாக சட்டப்பிரிவுகளை மாற்றி தயார் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கைப்பற்றிய சான்று பொருட்களுக்கு படிவம் 91 தயார் செய்து , நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அந்த படிவம் **அ.சா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அ.சா 1 சிகிச்சை அளித்த மருத்துவர்களை கடந்த 09.04.2013 அன்று ESI மருத்துவமனை மருத்துவர் திருமதி, சுகந்தி மற்றும் பெங்களூரு , செயிண்ட் ஜாண்ட்ஸ் மருத்துவமனை மருத்துவர் திரு. டாக்டர் . பெட்டி இசாக் அவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் மருத்துவர் டாக்டர் . பெட்டி இசாக் வழங்கிய காயச்சான்று பெற்றேன். பின்னர் , இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் அவர் கடந்த 31.12.2012 ம் தேதி மதுரை JM 6 நீதிமன்றத்தில் சரண்டர் ஆனவரை, இந்த குற்ற எண்ணில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கின் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. விஸ்வாசம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் , இவ்வழக்கின் புலன் விசாணையை முடித்து , எதிரி மீது U/s 294(b), 324, 506 (ii), 307 இதச

வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இவ்வழக்கின் சம்பவம் பற்றிய தகவல் 30.12.2012 ம் தேதி காலை சுமார் 8.00 மணியை போல் தகவல் கிடைத்தது. நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு சாட்சிகள் மரிய லியோ லிபரட் , ராமலிங்கம் , ஆரோக்கியராஜ் , சதீஸ் , அந்தோனிசாமி, மற்றும் ராமமூர்த்தி ஆகியோர்கள் இருந்தார்கள். சாட்சிகள் என்னிடம் எதிரிக்கும் புகார் கொடுத்தவருக்கும் இடையே முன்விரோதம் இருந்ததாக எதுவும் சொல்லவில்லை. அ.சா 1 ன் கம்பெனி சார்பில் எதிரி மீது இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக எந்தவொரு புகாரும் கொடுக்கப்பட்டதா இல்லையா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் அது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா 1 ன் மேலாளராக பணி புரிகிறார் என்றாலும் அவர்களுக்கு கீழ் பணிபுரியும் சாட்சிகள் மரிய லியோ லிபரட் , ஆரோக்கியராஜ் , சதீஸ் , பூபால் , அந்தோனிசாமி, மற்றும் ராமமூர்த்தி ஆகியோர்களை தான் சாட்சிகளாக விசாரித்தேன் என்றால் சரிதான்., அவர்களை தவிர வேறு சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். காரணம் , மற்றவர்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பதால் நான் அவர்களை விசாரிக்கவில்லை. அவ்வாறு நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரி அங்கிருந்ததற்கு சான்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்லியுள்ளவாறு எதிரி சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இட நிறுவத்தில் வாகனங்கள் வந்து செல்லும் டிப்சீட்டை நான் பார்வையிடவில்லை. நான் சரியாக புலன் விசாரணை செய்திருந்தால் எதிரியும் அவரது வாகனமும் , சம்பவ இடத்தில் இல்லை என்பது தெரிய வந்திருக்கும் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் எதிரி வந்த லாரியை சேர்க்கவும் இல்லை விசாரிக்கவும் இல்லை. அ.சா 1 அவரது நீதிமன்ற விசாரணையில் எதிரி என்னை தாக்கி விட்டு லாரியை எடுத்து சென்று விட்டார் என்று எனது விசாரணையில் எதிரி அ.சா 1 ஐ தாக்கி விட்டு தப்பி

ஓடிவிட்டதாக தான் கூறியுள்ளார். லாரியை எடுத்து சென்று விட்டதாக கூறவில்லை. சாட்சி ஆரோக்கியராஜ் நீதிமன்ற விசாரணையில் லாரியை கைப்பற்றதாக கூறியுள்ளார் ஆனால் எனது விசாரணையில் அவ்வாறு கூறவில்லை. சாட்சிகளின் விசாரணையில் எதிரி அ.சா 1 ஐ இத்தோடு செத்து ஒழிந்து போ என்று சொல்லி வெட்டியதாக வாக்குமூலம் கொடுத்ததால் நான் சட்டபிரிவை மாறுதல் செய்தேன். நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அ.சா 1 முதல் 4 வரையான சாட்சிகள் தான் எதிரையை அடித்து , லாரியை சேதப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. TN 20 R2364 என்ற 407 வாகனம் ஒரு வருடமாக காவல் நிலைய பொறுப்பில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது., நான் சரியாக புலன் விசாரணை செய்திருந்தால், வாகனம் காவல் நிலைய பொறுப்பில் இருந்தது பற்றி தெரிந்திருக்கும் என்றாலும் , நான் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur